**இலங்கை கரம் சம்மேளனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை கரம் சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று , வருமான செலவுக் கூற்று , திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசேடு மற்றும் பொதுப்பேரேடு என்பன சம்மேளனத்தினால் பராமரிக்கப்படாததுடன் பரீட்சை மீதியொன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இத்தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசேடு மற்றும் பொதுப்பேரேடு என்பன பராமரிக்கப்படல் வேண்டும்..பரீட்சை மீதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |

#### 1.5.2 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,061,520 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததுடன் எஸ்எம்ஈஎஸ் களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரிவு 17.19 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இத்தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்து பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும்.. |

### 1.5.3 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| கணக்காய்வு விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) வாடகை,நீர் மற்றும் மின்சார செலவுகள் | 1,795,610 | வாடகை ஒப்பந்தம், நீர்ப்பற்றுச்சீட்டுகள் மற்றும் மின்சார பற்றுச்சீட்டுகள், பட்டியல்கள் | ஆவணங்களை தவறாது சமர்ப்பிக்குமாறு முன்னாள் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (ஆ) அச்சிடல் மற்றும் எழுதுகருவிகள் | 36,349 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பட்டியல்கள் | ஆவணங்களை தவறாது சமர்ப்பிக்குமாறு முன்னாள் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (இ)கணக்கீட்டுக் கட்டணம் | 30,000 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பட்டியல்கள் | ஆவணங்களை தவறாது சமர்ப்பிக்குமாறு முன்னாள் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (ஈ) வங்கி மீதி | 291,044 | வங்கி உறுதிப்படுத்தல்கள் | ஆவணங்களை தவறாது சமர்ப்பிக்குமாறு முன்னாள் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வங்கி மீதியின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு வங்கி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (உ)கையிலுள்ள காசு | 30,180 | சுயாதீன உறுதிப்படுத்தல் | ஆவணங்களை தவறாது சமர்ப்பிக்குமாறு முன்னாள் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | கையிலுள்ள காசு இருப்பை உறுதிப்படுத்துவதற்கு சுயாதீன உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |
| (ஊ)நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 2,223,530 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான கொத்துக்கள் பதிவேடு | எதிர்காலத்தில் இத்தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு பௌதீக மெய்மையாய்வு அறிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) செலுத்த வேண்டிய வாடகை | 1,950,000 | மூன்றாம் தரப்பினர் உறுதிப்படுத்தல் | ஆவணங்களை தவறாது சமர்ப்பிக்குமாறு முன்னாள் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு மூன்றாம் தரப்பினர் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,682,070 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 49,209 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,731,279 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 2,660,999 ஆல் குறைவடைந்தமை இப்பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.